பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 25 செவ்வாய்க்கிழமை 13.12.2022 கதிர் 289

## மண்டபம் முகாமில் இருந்து தப்பி வந்த இருவர் சிக்கினர்

இந்தியா, தமிழக மண்டபம் முகாமில் இருந்து தப்பி வந்த இலங்கையர் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாகத் தமிழகம் சென்றிருந்தனர். 2

## இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பேச்சு: ரணிலின் அழைப்பில் இன்று கூட்டம்

தேசிய இனப் பிரச்சினைக் குத் தீர்வு காணும் நோக்கில் பேச்சுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தமிழ் – முஸ்லிம் கட்சிக ளின் தலைவர்களை இன்று சந்தித்துப் பேசுகின்றார்.

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிக ளின் பிரசன்னத்துக்கும் ஜனாதி பதி அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று மாலை 5.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்தப் பேச்சில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதி நிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், சி.வி.விக்னேஸ்வர னின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, டக்ளஸ் தேவானந்தா வின் ஈ.பி.டி.பி., பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், 2

## ஜனாதிபதியுடனான தீர்வுப் பேச்சில் விட்டுக்கொடுப்புக்கு இடமேயில்லை

### ஏமாறவும் தயாரில்லை என்று சம்பந்தன் சூளுரை



தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுடன் அவரின் அழைப்புக் கிணங்க இன்று பேச்சை ஆரம்பிக் கின்றோம். எமது நிலைப்பாட்டில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. நாம் ஏமாறவும் தயாரில்லை.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். 2

# முதலில் ஜனாதிபதித் தேர்தல் களமிறங்குகின்றார் ரணில்



### மஹிந்த பச்சைக்கொடி

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிரமாக ஆராய்ந்து வருகின்றார் என ஜனாதிபதி வட்டாரங்களில் இருந்து அறியக் கிடைக்கின்றது எனத் தென் னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 2

## வேலுகுமார் மீதான இடைக்காலத் தடையை உடனடியாக மீளப்பெற வேண்டும் கூட்டணி!



### கண்டி மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் கூட்டாகக் கோரிக்கை

தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது கண்டி மாவட்ட தமிழ் ம க்களின் உயிர்நாடியாகும். அதற்குத் துளியளவும் களங்கம் ஏற்படுவதற்கு நாம் இடமளிக்கம ாட்டோம். அது எமது உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே, நாடாளுமன்ற உறுப் பினர் வேலுகுமார் 8

## குறுகிய அவகாசத்துக்குள் தமிழர்களுக்கு நல்ல தீர்வு

### ரணிலிடம் வலியுறுத்த மனோ அணி முடிவு



குறுகிய கால அவகாசத் துக்குள் தமிழ் மக்களுக்கு நல்லதொரு அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துவோம் என தமிழ் முற்போக்குக் கூட் டணியின் தலைவர்கள் தெரிவித்தனர். 2

## மூன்று முக்கிய விடயங்களை ரணிலிடம் வலியுறுத்துவோம்

### சுமந்திரன் தெரிவிப்பு



தேசிய இனப்பிரச்சி னைக் குத் தீர்வு காணும் பொருட்டு இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் சர்வகட்சிக் கூட் டத்தில் தமிழ்த் தேசியக் கட் சிகள் ஏற்கனவே பேசி முடி வெடுத்த மூன்று 2

## முன்னாள் உபவேந்தர் மீது தாக்குதல்: 12 மாணவர்களுக்கு வகுப்புத் தடை!

### 10 பேர் பொலிஸாரால் கைது

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந் தரான சிரேஷ்ட பேராசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர் பில் பேராதனைப் பல் கலைக்கழகத்தில் 12 மாணவர் களுக்கு வகுப்புத் தடை விதிக் கப்பட்டுள்ளதுடன் அவர்களின் மாணவர் அந்தஸ்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 8

## மாநகர சபையாகும் மன்னார் நகர சபை

மன்னார் மற்றும் அம்பாறை நகர சபைகளை மாநகர சபை களாகத் தரமுயர்த் துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு 8

## பதுளையில் ஆசிரியர் மீது வெறியாட்டம்: அறிக்கை கோருகின்றார் அரவிந்தகுமார்



ஆசிரியர் ஒருவர் பாடசா லைக்குள்ளேயே, வெளியாரினால் தாக்கப்பட்டமை தொடர்பான சம்பவம் குறித்த அறிக்கையை, ஒரு வாரத்துக்குள் தனது கவனத் துக்குக் கொண்டு வருமாறு, கல்வி இராஜாங்க அமைச்சர் 8

## கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக அரங்கேறும் சூழ்ச்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும்!



### தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இளைஞர் அணி வலியுறுத்து

கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநி தித்துவம் என்பது காலத்தின் கட் டாயம். அந்த பிரதிநிதித்துவத்துக்கு எதிராக அரங்கேறும் சூழ்ச்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும். அரசி யல் ரீதியில் மீண்டும் அநாதைக ளாவதற்குக் கண்டி மாவட்ட தமி ழர்கள் தயாராக இல்லை. எனவே, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் 8

## ஜனதிபதியுடனான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதி தெரிவித்துள்ள விடயங்கள் தொடர்பில்நாங்கள்பேச்சைமுன்னெடுப்பதாக இருந்தால் அவரின் வாக்குறுதியின் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அந்தப் புதிய அரசமைப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் ஜனாதிபதியுடன் பேச்சை ஆரம்பிக்கின்றோம்.

எங்களுடைய முதல் கவனமும் தமிழர் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பானதே.

இந்த நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைகின்ற போதிலும் தமிழ் மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுக்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கி வருகின்றோம். ஆனால், தமிழர்களுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை.

அந்தத் தீர்வைக் காணும் நோக்குடன்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சை ஆரம்பிக்கின்றோம். எமதுநிலைப்பாட்டில்எந்தவிட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை. நாங்கள் ஏமாறவும் தயாரில்லை – என்றார்.

## முதலில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எதிர்க்கட்சியில் ரணிலுக்கு நிகரான பொருளாதார நிபுணத்துவமுடைய அரசியல்முதிர்ச்சியுடையஒருவேட்பாளர் இல்லாததால் ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்தி வெல்லலாம் என ரணில் கருதுகின்றார் எனத் தெரியவருகின்றது.

ரணிலுடன் ஒப்பிடுகையில் சஜித் பிரேமதாஸ ஒரு பலவீனமான வேட்பாளராக இருப்பதே ரணில் இவ்வாறு சிந்திப்பதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது.

ரணில் அவ்வாறானதொரு முடிவை – ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதென்ற முடிவை எடுத்தால் அதற்குப் பூரண ஆதரவுவழங்குவதென்றநிலைப்பாட்டில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச இருக்கின்றார் என்று தெரியவருகின்றது.

தனது முக்கிய சகாக்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மஹிந்த இந்த விவகாரம் பற்றி பேசி இருக்கின்றார்.ரணில் அப்படியொரு தீர்மானத்தை எடுத்தால் நாம் அதற்கு முழு ஆதரவு வழங்க வேண்டும் என்று அதில் கூறி இருக்கின்றார் – என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இனப்பிரச்சினை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்கவுள்ளன.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், தாம் இந்தச் சந்திப்பில் பங்கேற்கமாட்டோம் என்று அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இன்று நடைபெறும் இந்தச் சந்திப்பில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்களக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று முக்கிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களையும் சுதந்திர தினத்துக்கு முன்னதாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ரணில் எங்களை சர்வகட்சிக் கூட்டம் எனபட்டம்விட்டுஏமாற்றநினைக்கின்றார். இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சர்வகட்சிக் கூட்டம் என்பது வழமையான ஏமாற்றுவேலைதான். ஆனால், நாம் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுகின்றோம் என்பதைச் சர்வதேசத்துக்குச் சொல்வதற்காகவேனும் இந்தச் சர்வகட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

தொல்லியல் திணைக்களத்தாலும், வன உயிரிகள் திணைக்களத்தாலும், இதர விடயங்களாலும் தமிழர்களின் தாயகப் பகுதிகள் அபகரிக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். இதுவரை அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் தமிழர்களுக்குக் கையளிக்கப்பட வேண்டும்.

அரசமைப்பின் குறிப்பிடப்பட்டுள்ள தன்படியானஅதிகாரப்பகிர்வுஏற்பாடுகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், மாகாண சபைத் தேர்தலும் உடன் நடத்தப் வேண்டும். வடக்கு – கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்களைத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அண்மைய சந்திப்பின்போது மேற்கொண்டிருந்தோம். இந்த மூன்று தீர்மானங்களும் ஈ.பி.டி.பி. உள்ளிட்ட சகல தமிழ் அரசியல் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை. எனவே எல்லாத் தமிழ்க் கட்சி களாலும் ஏற்றுக்கொள்ளத் தக்க வியூ கத்துடன் இந்தச் சர்வகட்சிக் கூட்டத்தைத் தமிழ் மக்களின் சார்பில் அணுகவுள்ளோம் – என்றார்.

## மண்டபம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர்களைத் தமிழகக் கடலோரப் பாதுகாப்புப் பிரிவினர் விசாரணை செய்த பின்னர் மண்டபம் முகாமில் தங்க வைத்தனர். இந்நிலையில், மண்டபம் முகாமில் இருந்து தப்பியோடிய இருவரும், தமிழகத்தில் இருந்து படகொன்றில் சட்டவிரோதமான முறையில் யாழ்ப்பாணம் – வேலணை கடற்பரப்பினூடாக இலங்கையை வந்தடைந்த போது கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் கடற்படையினர் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் , மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்துள்ளனர்.

## குறுகிய......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பில் நீண்டகாலமாகத் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தந்தை செல்வா காலம் முதல் இது தொடர் கதையாகவே உள்ளது.

அவ்வாறில்லாமல் குறுகிய கால அவகாசத்துக்குள் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும் என்பதையும், மலையக மக்களுக்காக நிலப்பரப்பற்ற அதிகாரப் பகிர்வையும் ஜனாதிபதியிடம் நாம் வலியுறுத்துவோம் – என்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலுக்கு சுக்கிர திசை

அரசியல் பொதுநலம் பற்றியது என்றாலும், அதில் முதலில் முனைப்பு பெற்று, முந்திக்கொண்டு நிற்பது சுயநலம்தான். அதன்பின்தான் பொதுநலன் என்ற சிந்தனை விரியும்.

இந்த மனித சுபாவத்திற்கு ரணில் விக்கிரமசிங்கம் மட்டும் என்ன வேறுபட்டவரா?

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து கரையேற்றுவதற்கான மீட்பராகத் தன்னைக் காட்டிக்கொண்டுதான் ஜனாதிபதி பதவியை ஏற்றார் ரணில் விக்கிரமசிங்க. அதற்காகவே தான் இப்போது உழைக்கின்றார் என்று நாள் தவறாமல் அவர் கூறுகிறார். அதாவது நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கும் பொது நலன்தான் தமக்கு முக்கியம் என்று அவர் படம் போடுகின்றார்.

ஆனால் அதை மிஞ்சிய சுயநலம் ஒன்று அதற்குள் புதைந்து கிடைப்பதை அவர் மறைத்து விடுவதுதான் அவரது திறமையான நகாசு வேலை.

அடுத்த இரண்டு வருட ஆட்சி காலம்தான் அவருக்கு இப்போது உள்ளது. இந்த காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பாரோ இல்லையோ, அதன் பின்னர் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான தனது பதவிக்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் மட்டும் அவர் முனைப்பாக இருக்கின்றார்.

இயன்ற விரைவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, தமது அடுத்த பதவி காலத்தையும் உறுதிப்படுத்த அவர் விரும்புகின்றார்.

இப்போது அத்தகைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி தேர்தலை நடத்தினால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதைப் பயன்படுத்தி தன்னை விஸ்வரூபம் கொள்ள வைத்து விடும். அந்த வெற்றியில் திளைத்து நிற்கும் அக்கட்சியின் வேட் பாளரை – பெரும்பாலும் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவை – அதன் பின்னர் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்கடிப்பது மிகக் கஷ்டமாக இருக்கும் என்று கணக்கு போடுகின்றார் ரணில்.

அதன் காரணமாகத் தாம் விரைவில் நடத்த உத்தேசித்திருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், எந்த தேர்தலையும் – உள்ளூராட்சித் தேர்தல் உட்பட – நடத்த இடமளிக்காமல் பார்ப்பதில் ரணில் உறுதியாக இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அதனால் தான் நடக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலுக்கு இப்போது ஆப்பு வைக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை அவர் தளர்ந்து விட்டார். தாம் இரண்டு முறை தாண்டி, இன்னொரு தடவை மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட சட்டத்தில் இப்போது இடமில்லை. ஆகவே மகன் நாமலின் அரசியல் எதிர்காலம் குறித்து அவர் சிந்திக்கிறார்.

ரணில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியானால், வயதான அவர், அந்த ஒரு தடவையுடன் அரசியலை முடித்துக் கொள்வார். அப்போது நாமலுக்கு வெற்றிடம் கிடைக்கும். மாறாக, வேறு யாரேனும் இம்முறை தேர்தலில் ஜனாதிபதியானால் அவர் பத்தாண்டுகள் – இரண்டு தடவைகள் – அப்பதவியில் காலத்தை ஒட்டி விடுவார். அதுவரை நாமல் காத்திருக்க வேண்டும். அதனால் இந்தத் தடவை ரணில் தேர்தல் நின்று வெல்வதை மஹிந்தரும் ஆதரிக்கின்றார்.

ரணிலுக்கு சுக்கிர திசை போலத்தான் தோன்றுகின்றது.



## சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு செயலமர்வுகள் முன்னெடுப்பு

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள், உடல் ரீதியான தண்டனையிலிருந்து சிறுவர்களை பாதுகாத்தல் எனும் தலைப்பில் செயலமர்வு இடம் பெற்றுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் இந்த செயலமர்வு இடம் பெற்றது.

இதில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் மேற்படி தலைப்புக்கள் தொடர்பில் விரிவுரையாற்றினார்.

மேற்படி செயலமர்வில் கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட இணைப்பாளர்கள் , மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் ஆணைக் குழுவின் அலுவலர்களும் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலா விசாவில் மலேஷியாவுக்கு ஆள்களை அனுப்புவதற்கு முயற்சி!

### தங்காலையில் பெண் கைது

தங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், சுற்றுலா வீசா மூலம் மலேஷியாவில் தொழில் வழங்குவதாகக் கூறி 9 பேரிடமிருந்து 50 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொண்டமை தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சுற்றுலா விசாவில் மலேஷியாவுக்குச் செல்ல முற்பட்டபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் அண்மையில் தடுத்து நிறுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே மேற்படி பெண் ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்மை கண்டறிப்பட்டதாகவும் அவர் விசேட விசாரணைப் பிரிவைத் தவிர்த்து வந்தார் எனவும் பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மீறி வெளிநாடு செல்ல முயற்சித்த 8 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.




## பெண்கள் சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான விழிப்புணர்வு!

பெண்கள் சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான விழிப்புணர்வு வேலைத்திட்டம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் இந்த செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக இழைக்கப்படும் வன்முறைகள், இம்சைகள் வெறுப்புணர்வூட்டக்கூடிய சம்பவங்கள் இடம்பெறும்பொழுது உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தும் அவசர தொலைபேசி இலக்கங்கள் கொண்ட சுவரொட்டிகள் பொது இடங்களிலும், பொதுப் போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து பஸ்களிலும் ஒட்டப்பட்டன.

இந்த செயற்திட்டம் வன்முறைக்கெதிரான அக்கறையுள்ள தரப்பினர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திலீப்குமார் தெரிவித்துள்ளார்,

மேற்படி செயல்திட்டம் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அமுல்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது,

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆஸ்திரேலியா பொலிஸார் மீது தாக்குதல் இரண்டு காவலர்கள் உள்பட 06 பேர் பலி!








சிட்னி, டிச.13

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணம் விம்பிலா நகரில் கடந்த சில மாதங்களுக்கு முன் காணாமல் போன நபர் ஒரு பண்ணை வீட்டில் இருக்கிறார் எனப்பொலிஸாருக்கு நேற்றுத்தகவல் கிடைத்ததையடுத்து, அந்த பண்ணை வீட்டிற்கு நேற்று மாலை 5 மணியளவில் பொலிஸார் சென்றுள்ளனர்.

அப்போது, அந்த வீட்டிற்குள் இருந்த 3 பேர் கொண்ட கும்பல் பொலிஸார் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியது. இந்தத் தாக்குதலால் அதிர்ச்சியடைந்த பொலிஸார் உடனடியாக பதில் தாக்குதல் நடத்தியமையுடன் கூடுதல் பொலிஸாரை அனுப்பும்படி தகவல் கொடுத்தனர்.

அந்தப் பண்ணை வீட்டில் இருந்த பெண் உள்பட 3 பேர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் அதிகாரிகள் ரஸெல் மெக்கிரவ்ன் மற்றும் மேத்திவ் அர்னால்டு ஆகிய 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல் சத்தம் கேட்டு அருகில் வசித்து வந்த நபர் அந்த பண்ணை வீட்டிற்கு ஓடி வந்துள்ளார். அப்போது, அந்த நபர் மீதும் அந்த கும்பல் துப்பாக்கிச்சூடு நடத்தியது. இதில், அவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அங்கு கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து இருதரப்புகள் இடையே துப்பாக்கிச்சண்டை நடைபெற்றது. 6 மணி நேரம் நடந்த இந்த மோதலில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய பெண் உள்பட 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனால், இந்த மோதலில் 2 பொலிஸார், 1 பொதுமகன் உள்பட 6 பேர் உயிரிழந்தனர். மேலும், சில பொலிஸாருக்குக் காயம் ஏற்பட்டது.

பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியது யார், தாக்குதலுக்கான காரணம் என்ன என்பவை குறித்து

பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆப்கான் ஹோட்டலில் துப்பாக்கிச் சூடு மூன்று பேர் சாவு; இருவருக்குக் காயம்!




காபூல், டிச.13

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஹோட்டல் அருகே பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். ஈஹர்+இ-நாவ் பகுதியில் சீனர்கள் அதிகம் தங்கும் ஹோட்டலை குறி வைத்துத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நடைபெற்ற போது அப்பகுதியில் உள்ள கட்டடம் தீப்பிடித்து எரிந்துள்ளது. இதனையடுத்து, அங்கு வந்த பாதுகாப்பு படையினர், துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்திய 3 பேரை சுட்டுக்கொன்றனர்.

இந்த தாக்குதலின் போது ஹோட்டல் பால்கனியில் இருந்து குதித்து தப்பிக்க முயன்ற வெளிநாட்டை சேர்ந்த 2 பேர் காயமடைந்தனர் எனத் தாலிபான் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், காபூலில் உள்ள சீன விருந்தினர் மாளிகைக்கு அருகில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், காபூலில் உள்ள சீன தூதரகம் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் சீன செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.




## கனடாவில் சீக்கிய இளைஞர் மர்மநபரால் சுட்டுக் கொலை..!!

ஒட்டாவா, டிச.13

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்தில் வசித்து வந்த இந்திய வம்சாவளியை சேர்ந்த சீக்கியரான 24 வயதுடைய இளைஞரான சன்ராஜ் சிங் எட்மன்டன் நகரில் தனது வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு மற்றொரு வாகனத்தில் வந்த மர்ம நபர் ஒருவர் சன்ராஜ் வாகனத்தை மறித்து, அவரைத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் பொலிஸார் அங்கு விரைந்து சென்றபோது, சன்ராஜ் தனது வாகனத்தில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார். இதையடுத்து பொலிஸார் அம்புலன்ஸுக்கு தகவல் கொடுத்துவிட்டு சன்ராஜுக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். ஆனால் அம்புலன்ஸ் வருவதற்குள் சன்ராஜ்

இறந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது கொலைக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியாத நிலையில், தப்பியோடிய கொலையாளியை பொலிஸார் வலை வீசி தேடி வருகின்றனர். கடந்த 3 ஆம் திகதி கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் 21வயதான பவன்பிரீத் கவுர் என்கிற சீக்கிய பெண் மர்ம நபரால் சுட்டுக்கொல்லப்பட்டமையும், கடந்த மாதம் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் மெஹக்ப்ரீத் சேத்தி என்கிற 18 வயது சிறுவன் கத்தியால் குத்திக்கொல்லப்பட்டதும் குறிப்பிடத் தக்கது..

## இத்தாலியில் விடுதியில் சூடு மூன்று பெண்கள் உயிரிழப்பு



ரோம், டிச.13

இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசிக்கும் குடியிருப்பாளர்களின் சங்கக் கூட்டம், அங்குள்ள விடுதியில் நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் பங்கேற்று இருந்தனர். இந்த கூட்டத்தில் எதிர்பாராத விதமாக திடீரென நுழைந்த மர்ம நபர் துப்பாக்கியை வெளியே எடுத்து சரமாரியாகச் சுட்டுள்ளார்.

இதில் 3 பெண்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். சிலர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். இந்தத் தாக்குதல் தொடர்பாக 57 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. குடியிருப்பாளர் சங்க நிர்வாகிகளுக்கும் அவருக்கும் பிரச்சினை இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், துப்பாக்கி சூட்டில் இறந்துபோன பெண்களில் நிகோலெட்டா என்பவர் தனது தோழி என்றும், அவரது குடும்பத்திற்கு இரங்கல் தெரிவிக்கிறார் எனவும் இத்தாலிய பிரதமர் ஜார்ஜியா மெலோனி கூறி உள்ளார்.

# இந்தியா-சீனா எல்லையில் மோதல்!

## பாதுகாப்பு அமைச்சர் முப்படைகளுடன் மந்திராலோசனை



புதுடெல்லி, டிச.13

அருணாச்சலபிரதேச எல்லையில் தவாங் செக்டார் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி இந்திய – சீன படைகள் மோதிக்கொண்டன.

இந்த மோதலில் இரு தரப்பிலும் வீரர்கள் காயமடைந்தனர். இந்திய தரப்பில் 15 வீரர்கள் காயமடைந்தனர். சீனதரப்பில் அதிக அளவிலான வீரர்கள் காயமடைந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த மோதல் குறித்த தகவலை இந்திய ராணுவம் நேற்று வெளியிட்டது.

இதனிடையே, இமாச்சலபிரதேச எல்லையில் சீன படைகள் மோதலில் ஈடுபட்ட நிலையில் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்நிலையில், எல்லையில் சீன படைகள் மோதலில் ஈடுபட்டது தொடர்பாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இன்று அவசர ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்த அவரச ஆலோசனையில் முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான், முப்படை தளபதிகள், வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் உள்பட முக்கிய தலைவர்கள் பங்கேற்றுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆலோசனையில் சீன எல்லை விவகாரம் குறித்து முக்கிய ஆய்வு நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சென்னை அருகே பரந்தூரில் இன்னொரு விமான நிலையம்

## ரூபா 2,467 கோடி செலவில் அமையும்



புதுடெல்லி, டிச.13

விமான நிலையங்களை தனியாருக்கு குத்தகைக்கு விட்ட விவரங்கள் தொடர்பாக மாநிலங்களவையில் தி.மு.கவின் எம்.பியான கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், ஐக்கிய ஜனதா தளம் எம்.பி. அனில் பிரசாத் ஹெக்டே மற்றும் கேரளாவைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு எம்.பி. இளமாரம் கரீம் ஆகியோர் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு சிவில் விமான போக்குவரத்துத்துறை இணை மந்திரி வி.கே.சிங் நேற்று எழுத்துப்பூர்வமாக பதில் அளித்து இருந்தார். அதில் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.2,349 கோடிக்கு குத்தகை அடிப்படையில் 6 விமான நிலையங்கள் பொது-தனியார்கூட்டாண்மைமுறையில்ஏலம்விடப்பட்டன எனக் கூறியுள்ளார்.

மேலும் சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகள் மற்றும் புதிய விமான நிலையம் பற்றி கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்கு மந்திரி வி.கே.சிங் அளித்த பதிலில்–

சென்னையில் தற்போதுள்ள விமான நிலையத்துக்கு இட நெருக்கடி உள்ளது. இதனை விரிவாக்கம்செய்யவிமானநிலைய ஆணையம் ஆய்வு மேற்கொண்டது. இதன்படி புதிய முனையம் ரூ.2,467 கோடிக்கு அமைகிறது. இதன்மூலம் விமான நிலைய திறன் உயர்த்தப்படும். புதிய விமான நிலையத்தைப் பொறுத்தவரை ஆணையம் நடத்திய சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில் 2 ஆவது விமான நிலையத்துக்கு சென்னை அருகில் உள்ள பரந்தூரை மாநில அரசு தேர்வு செய்துள்ளது என கூறப்பட்டு உள்ளது.





# இந்திய பிரதமர் பற்றி சர்ச்சைப் பேச்சு; காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் கைது!

போபால் , டிச.13

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த காங்கிரஸ் மூத்த தலைவரும், மத்திய பிரதேச முன்னாள் மந்திரி ராஜா படேரியா, பன்னா மாவட்டத்தில் உள்ள பவாய் என்ற நகரத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் அண்மையில் உரையாற்றியிருந்தார்.

அப்போது, மோடி தேர்தல்களுக்கு முடிவு கட்டி விடுவார். மோடி மதம், சாதி, மொழியின் பெயரால் பிளவுபடுத்துவார். தலித்துகள், பழங்குடியினர், சிறுபான்மையினர் எதிர்காலம் ஆபத்தில் உள்ளது. நீங்கள் அரசியல் சாசனத்தை காப்பாற்ற வேண்டும் என்று விரும்பினால், மோடியைக் கொல்வதற்கு தயாராகுங்கள். அவரை வீழ்த்துவதாக கருதி கொல்லுங்கள்!" என்று அவர் கூறி உள்ளார்.

அவரது பேச்சு வீடியோவாக பதிவாகி வைரலாகி வருகிறது. இதையடுத்து ராஜா படேரியா மீது மத்தியப் பிரதேச அரசு வழக்கு பதிவு செய்தது. இந்த நிலையில் மோடி குறித்து சர்ச்சைக்குரிய வகையில்பேசியவழக்கில்ராஜாபட்டேரியாகைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழகத்தில் பாதுகாப்பு தொழில் முறைக்கு ரூ. 11ஆயிரம் கோடி முதலீட்டுக்கு ஒப்பந்தம்



புதுடெல்லி, டிச.13

தன்னிறைவு இந்தியா மற்றும் 'மேக் இன் இந்தியா' என்கிற இலக்கை அடைவதற்கு நாட்டில் 2 பாதுகாப்பு தொழில்துறை வழித்தடங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

ஒன்று உத்தரபிரதேசத்தில் ஆக்ரா, அலிகார், சித்ரகூட், ஜான்சி, கான்பூர் மற்றும் லக்னோ வழித்தடத்தில் அமைகிறது. மற்றொன்று தமிழகத்தில் சென்னை, திருச்சி, கோவை, ஓசூர், சேலம் வழித்தடத்தில் அமைகிறது.

தமிழக அரசிடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி 53 தொழில்கள் மூலம் ரூ.11 ஆயிரத்து 794 கோடி முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன, ஏற்கனவே ரூ.3,847 கோடி முதலீடுவ்செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக மொத்தம் 910 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. இந்தத் தகவல்களை மத்திய பாதுகாப்புத்துறை இணை மந்திரி அஜய்பட் மாநிலங்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதிலாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சராகின்றார் உதயநிதி ஸ்டாலின்

## நாளை பதவியேற்பு



சென்னை, டிச.13

தி.மு.க. இளைஞரணி செயலாளராக 2 ஆவது முறையாக உதயநிதி ஸ்டாலின் கடந்த மாதம் நியமிக்கப்பட்டார். அப்போதே விரைவில் அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதையடுத்து, நாளையதினம் உதயநிதி ஸ்டாலின் அமைச்சராவார் என தகவல்கள் வெளியுள்ளது. உதயநிதி அமைச்சராகும் அதே நாளில் 4 அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றம் செய்யப்படும் என்றும் தெரிகிறது.

இந்நிலையில், முதலமைச்சர் ஸ்டாலினின் பரிந்துரையை ஏற்று ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளதன் மூலம் உதயநிதி ஸ்டாலின் நாளையதினம் அமைச்சராக பதவியேற்க உள்ளார். நாளை காலை 9.30 மணிக்கு ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா நடைபெறும் எனஆளுநர்மாளிகைஅறிவிப்புவெளியிட்டுள்ளது. உதயநிதி ஸ்டாலினுக்காக கோட்டையில் தனி அறை ஒன்று தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைபொருளுக்கு எதிராகப் போர்க்கொடி காத்தான்குடியில் பள்ளிவாசலின் முன்மாதிரி!

## அல் அக்ஸா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் அறிவிப்பு





(கனகராசா சரவணன்)

காத்தான்குடியில் போதை பொருள் வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்கள் அத்தகைய தங்கள் நடவடிக்கையை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் நிறுத்த வேண்டும். இல்லாதவிடத்தில் அவர்களுக்கும் பள்ளிவாசலுக்கும் உள்ள தொடர்புகள் உட்பட்ட அனைத்தும் நிறுத்தப்படுவதுடன் அவர்களில் ஒருவர் உயிரிழந்தால் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய பிரத்தியோக இடம் ஒதுக்கபடும் என்பன போன்ற தீர்மானங்களைஎடுத்துள்ளதாக நேற்றுத் திங்கட்கிழமை புதிய காத்தான்குடி அல் அக்ஸா பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவரும் வர்த்தக சங்க தலைவலருமானகலந்தர்லெப்பை முகமட்பரீட் தெரிவித்தார்.

புதிய காத்தான்குடி அல்அக்ஸாபெரியஜும்ஆ பள்ளிவாசல்நம்பிக்கையாளர் சபையின்மாதாந்தகூட்டம் இடம்பெற்றபோது அதில் போதைபொருக்குஅடிமைப்பட்டமக்களைமீட்டெடுப்பதற்கா சில தீர்மானங்களை எடுக்கப்பட்டுள்ளன.

அதன்அடிப்படையில் போதைப்பொருள்பயன்படுத்தும் மற்றும் வியாபாரம் செய்யும் இல்லங்களில் நடைபெறும் திருமணத்திற்கு எமது பள்ளிவாசலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்படமாட்டாது.

அதேபோல அத்தகைய இல்லங்களில் நடைபெறும் ஜனாஸாக் கடமைகளுக்கு எமது பள்ளிவாசலினால் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப்படமாட்டாது என்பதுடன் அவர்களின் ஜனாஸாக்கள் எமது மையவாடியில்அவர்களுக்காகபிரத்தியேகமாகஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அடக்கம் செய்யப்படும்


அதேவேளை போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் வியாபாரிகளின் பெயர் விவரங்கள் விளம்பரப் பலகைமூலம்காட்சிப்படுத்தப்படுவதுடன்போதைப்பொருள் பாவனையாளர்கள்மற்றும்வியாபாரிகளின்விவரங்களை உயர் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி மிகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் மற்றும் வியாபாரிகளின்மஹல்லாஉரிமம் இரத்துச்செய்யப்படும். – போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அந்தப் புதிய தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

எனவே எதிர்வரும் 2023 ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் போதை பொருள் பாவனையாளர்கள், வியாபரிகள் அதனை நிறுத்தவேண்டும். இந்தத் தீர்மானத்தை அதிகளவானோர் வரவேற்றுள்ளனர். இதனை ஏனைய பள்ளிவாசல்களும் கடைபிடித்தால் இந்தப் போதை பொருளை முற்றாக தடுக்கமுடியம். – என அவர் தெரிவித்தார்.

# கல்முனை பஸ் நிலையத்தில் தரிப்பிட சர்ச்சைக்குத் தீர்வு!

## முதல்வர் தலையிட்டு நடவடிக்கை




(எம்.எம்.அஸ்லம்)

கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களையும் தனியார் பஸ்களையும் தரிக்கச் செய்வதில் இரு தரப்பினரிடையே நிலவி வந்த சர்ச்சை மாநகர முதல்வரின் தலையீட்டினால் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த சர்ச்சை தொடர்பாக ஆராய்வதற்காக பஸ் நிலையத்திற்கு நேரடியாக கள விஜயம் மேற்கொண்ட மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், இரு தரப்பினரதும் கோரிக்கைகளை உள்வாங்கி, எவருக்கும் பாதகமில்லாத வகையில் இட ஒதுக்கீடுகளை மேற்கொண்டதன் மூலம் பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக முதல்வர் செயலகம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் இரு பிரிவு பஸ்களையும் நிறுத்துவதற்கான இடங்கள் முதல்வரின் நேரடிக்கண்காணிப்பில் வெள்ளைக் கோட்டினால் அடையாளப்படுத்தப்பட்டு, இட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது பாதசாரிகள் மற்றும் பயணிகளுக்கும் மாநகர சபை மற்றும் பொது நூலகத்திற்கும் வாகன போக்குவரத்துகளுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் பொலிஸ் வீதியில் பஸ்களை நிறுத்தும் செயற்பாட்டை தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, இதன்போது ஓட்டோ உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக ஓட்டோக்களுக்கும் பஸ் நிலையத்தின் ஒரு பகுதியில் மாநகர முதல்வரினால் இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முதல்வர் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இக்களப்பணியில் முதல்வருடன் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அமீர், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், வருமானப் பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் உள்ளிட்ட ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்..

# தூய அன்னை சாரதா தேவியின் 170 ஆவது ஜெயந்தி தின விழா

## மட்டக்களப்பில் நாளை முதல்



( வி.ரி. சகாதேவராஜா)

தூய அன்னை சாரதா தேவி அம்மையாரின் 170 ஆவது ஜெயந்தி தின விழா நாளை மறு தினம் வியாழக்கிழமை ஆகும்.

அதனை முன்னிட்டு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மின் சிறுவர் இல்லத்தில் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீமகராஜ்தலைமையில்ஜனன தினவிழாஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

அதற்கு முன்னோடியாக நாளை புதன் கிழமை மாலை 4.30 மணியளவில் கல்லடியில் அன்னையாரின் திருவுருவப் படம் தாங்கிய ரத ஊர்வலம் இடம்பெற இருக்கின்றது.

மறுநாள் வியாழக்கிழமை இராமகிருஷ்ண மிஷினில் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவா னந்தா ஜீ மகராஜ் முன்னிலை யில் சிறப்பு அன்னையர் தின விழா அதிகாலை 5 மணியளவில் வேதமந்திரங்கள் மங்களாரதியு டன் ஆரம்பமாகிறது.

அதேவேளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கல்லடி சுவாமி விபுலானந்தா மணிமண்டபத்தில் பிரதான பொதுநிகழ்ச்சி இடம்பெற இருக்கின்றது.

காலை காலை 9:00 மணிக்கு கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி ஹம்சத்வனி சர்மாவின்பக்திஇசையுடன்நிகழ்ச்சிகள் ஆரம்பமா கின்றன. தாய்மை நிறை சாரதா என்ற தலைப்பிலே சாரதா பாலர் பாட சாலை அதிபர் திருமதி இந்திராணிபுஷ்பராஜா சிற்றுரையாற்ற, திருகோணமலை மாவட்ட செயலக மொழிபெயர்ப்பாளர் திருமதி லலிதா சுதாகரனின்ன் சிறப்புரை யும் இடம்பெறவிருக்கின்றது.

காணொலி வாயிலாக இராம கிருஷ்ண மின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜீ மகராஜின் ஆசியுரை இடம் பெற இருக்கின்றது.

அத்துடன் விவேகானந்த மனித வள மேம்பாட்டு நிலையம் ஜீவனானந்த சமூக சேவைகள் நிலையம் பற்றியும் சாரதைக் களஞ்சியம் இலத்திரனியல் சஞ்சிகை பற்றிய அறிமுக உரையை கல்லடி இராம கிருஷ்ண மின் சிறுவர் இல்ல உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்த ஜீ மஹராஜ் நிகழ்த்தவிருக்கின்றார். இலங்கை ராமகிருஷ்ண மின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ் ஆசியுரை வழங்க இருக்கின்றார். இறுதியில் எழுபது முதியோர்களுக்கு புத்தாடையும் அரிசியும் வழங்கி வைக்கப்பட இருக்கின்றன.

# காரைதீவில் 'நாவலர் வீதி' ஞாயிறு திறந்து வைப்பு

## நாவலர் ஆண்டுக்கான முதல் நடவடிக்கை




இலங்கை அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டின் செயற்திட்டங்களை இலங்கையில் முதன்முதலாக விபுலானந்த அடிகள் பிறந்த காரைதீவில் முன்னெடுக்கப்பட்டது.

அந்த நிகழ்வு காரைதீவு பிரதேசத்தில் நேற்று முன்னம் ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாய பூர்வமாக அங் குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் இன்று நாவலர் வீதி பெயர்ப்பலகை காரைதீவு – 12ஆம் பிரிவில் திரைநீக்கம் செய்து திறந்து வைக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அனிருத்தனன் , திருக்கோவில் உதவிபிரதேச செயலாளர் க.சதிசேகரன், ஆலையடிவேம்பு உதவி பிரதேச செயலாளர் ரெ.சுவாகர், ஆன்மீக ஆர்வலர் உதவிக்கல்விப்பணிப்பாளர் வீ.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர்களான கு.ஜெயராஜி, ந.பிரதாப், காரைதீவு கலாச்சார உத்தியோகத்தர் திருமதி சிவலோஜினி ஆகியோரின் நெறிப்படுத்தலில் நிகழ்வு இடம்பெற்றது. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் அடுத்த வருடத்தை நாவலர் ஆண்டாக ஜனாதிபதி முன்னிலையில் பிரகடனப்படுத்திஇருந்தது.

அந்த நாவலர் ஆண்டின் 17 செயற்றிட்டங்களில் ஒன்றான வீதி ஒன்றிற்கு நாவலர் வீதி என பெயர் சூட்ட காரைதீவு பிரதேச சபை சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. அங்கு நாவலர் ஆண்டை முன்னெடுக்க பிரகடனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வடக்கில் நல்லூரில் பிறந்த நாவலர் பெருமானுக்கு கிழக்கில் காரைதீவில் பிறந்த விபுலானந்த அடிகளாரின் கோட்டையில் முதல் கௌரவம் வழங்கப்பட்டிருக்கிறது.

# முன்னாள் உபவேந்தரைத் தாக்கிய அனைவருக்கும் தண்டனை நிச்சயம்!

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் திட்டவட்டம்



பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் தாக்கப்பட்ட விவகாரத்துடன் தொடர்புடைய 11 பேர் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இதனுடன் தொடர்புடைய அனைவரும் நிச்சயம் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருபோதும் அனுமதிக்கக் கூடியவையல்ல என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் தாக்கப்பட்ட விவகாரம் எவ்வாறு ஆரம்பித்தது என்பது தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. இது முழு பல்கலைக்கழக கட்டமைப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலாகும்.

எனவே இந்த விவகாரம் தொடர்பில் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடைய 11 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் நிச்சயம் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் சேவையாற்றும் எந்தவொரு தரப்பினருக்கும் இவ்வாறான தாக்குதலுக்கு உள்ளாக இனியொரு போதும் இடமளிக்கப்படக் கூடாது. இதனுடன் தொடர்புடையோருக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் , எதிர்வரும் காலங்களில் எம்மால் பல்கலைக்கழக கட்டமைப்பை நிர்வகிக்க முடியாத நிலைமை ஏற்படும்.

பகிடிவதைகளுக்கு எதிராக பல்கலைக்கழகங்களுக்குள் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றின் பிரதி பலனாகவே இவ்வாறான செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் இது பகிடிவதைகளின் இறுதி காலமாகும். – என்றார்.

## முன்னாள் துணைவேந்தர் மீதான தாக்குதல்: அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு



பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையை தமக்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (திங்கட்கிழமை) அனைத்து பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்பின்னர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இவ்வாறான சம்பவங்களுக்கு முகங்கொடுக்க இடமளிக்கக் கூடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு பிரதானிகளிடம் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பிலான முழுமையான அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் குழுவால் தாக்கப்பட்டதாக கூறப்படும் பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் மற்றும் அவரது மகன் மருத்துவ சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ். செங்குந்தா இந்து பாடசாலையில் மாணவர்களுக்கான சத்துணவு திட்டம்!



யாழ். செங்குந்தா இந்து பாடசாலையில் மாணவர்களுக்கான மதிய சத்துணவு திட்டத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நேற்று (திங்கட்கிழமை) புலம் பெயர்ந்தவர்களின் ஒருங்கிணைந்த அமைப்பின் விஸ்வநாதன் தலைமையில் இந்தத் திட்டத்துக்கான 10 லட்சம் ரூபா நிதியுதவி காசோலை வழங்கப்பட்டது.

இதற்கமைய முதற் கட்டமாக பாடசாலையின் வங்கி கணக்கில் தலா 2 லட்சம் ரூபா நிதியை வடமாகாண ஆளுநரின் பெயரில் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், வடமாகாண ஆளுநரின் பிரத்தியோகச் செயலாளர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மீண்டும் கடலரிப்பு ஆபத்தை எதிர்நோக்கும் மாளிகைக்காடு

## தற்காலிகத் தீர்வுகள் பயனற்று போகின







(நூருல் ஹுதா உமர்)

கடல்கொந்தளிப்பினால் மீண்டும் பிரச்சினையை சந்திக்க தயாராகி வருகின்றது மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி. கடந்த வருடம் ஏற்பட்ட கடல்கொந்தளிப்பினால் சுற்றுமதில் முழுமையாக இடிந்து விழுந்து ஜனாஸாக்கள் வெளிவந்துகொண்டிருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியின் பயனாக பிரதமரின் தலையீட்டினால் ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட தடுப்புசுவரும் இந்த வருட கடல் கொந்தளிப்பினால் பயனற்று போய் கடலரிப்புக்கு இலக்காகி சேதமாகியுள்ளது.

கடல்கொந்தளிப்பிலிருந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடியை பாதுகாக்க நிர்மாணிக்கப்பட்ட அணைக்கட்டுக்கு பக்கத்தில் 10 – 12 அடி ஆழமான பாரிய குழிகள் விழுந்துள்ளதுடன் கடலரிப்பினால் கடலை நோக்கி மண்ணிழுபட்டு சென்றுள்ளதனால் அணைக்கட்டும் பலமிழந்து மாளிகைக்காடு ஜனாஸா மையவாடி ஆபத்தைச் சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை மீண்டும் எழுந்துள்ளது.

மையவாடிக்கு அண்மையில் உள்ள விநாயகர் ஆலயம், பாதுகாப்புப்படை காரியாலயம் போன்றன கடலரிப்புக்கு இலக்காகி உள்ளன. இது விடயம் தொடர்பில் அரச அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மீனவர்களின் மீன்பிடி படகுகளும், வள்ளங்களும் நிறுத்த இடமின்றி வீதிக்கு அருகில் இழுத்து வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதுடன் கொங்கிரீட் வீதிகளும் கடலரிப்பில் உடைந்து கடலுடன் சங்கமித்துள்ளன. அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்கள் முற்றாக கடலரிப்புக்கு இலக்காகியுள்ளமை இங்கு கவனிக்கப்படவேண்டியுள்ளது.

## வேலுகுமார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள 'இடைக் காலத் தடை'யை தமிழ் முற்போக்குக் கூட்டணி உடனடியாக மீளப்பெற வேண்டும் – என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட உள்ளூ ராட்சி சபைகளின் உறுப்பினர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

'ஒற்றுமை'யே பலம்பொருந்திய ஆயுதம். தமிழ் பேசும் மக்களின் இருப் புக்கான அடித்தளம். அதனை மேலும் பலமாக்கவே நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் பாடுபட்டுக்கொண்டிருக் கின்றார். அவர் 'நடுநிலை' வகித்த தீர்மா னம்கூட, கூட்டணியின் நன்மை கருதி யது. எனவே, தடம் புரண்ட– மாறிய இடத்தை சீர்செய்துகொண்டு முன் னோக்கிப் பயணித்தால் மட்டுமே இலக்கை நோக்கிநகர முடியும். அதனை விடுத்து அவருக்கு எதிராக 'சேறுபூசும்' பரப்புரைகளை முன்னெடுப்பது ஏற் றுக்கொள்ள முடியாதது; கண்டிக் கத்தக்கது.

அலசி ஆராயாமல், அரசியல் சேறுபூசலுக்கு வழிவகுக்கும் வகையில் எமது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை மைப்பீடம் எடுத்த அவசர முடிவு ஏற்புடை யது அல்ல. எனவே, 'கூட்டணியிலிருந்து இடைநிறுத்தம்' என்ற முடிவு உடனடியாக மீளப்பெறப்பட வேண்டும். எமது இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் என்ற வகையில் கட்சி, கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் நாம் சுயாதீனமாகச் செயற்படுவோம்.

எப்போது பிளவு வரும், சரிவு வரும் என வழி மீது விழிவைத்துக் காத்தி ருக்கும் – பேரினவாத சக்திகளுக்குத் துணைபோகும்சிலசதிகாரக்கும்பலுக்கு, தமிழ் முற்போக்குக் கூட்டணி எடுத்த முடியானது, தாக்குதலைத் தொடுப்ப தற்கான சிறந்த அஸ்திரமாக அமை ந்துவிட்டது. அதனை வைத்துக்கொண்டு மிகவும் மோசமான முறையில் விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டன. குறிப் பாக சமூகவலைத்தளங்களில் கூலிக்கு மாரடிக்கும் கூட்டமும் இதை வைத்துக் கொண்டு சிற்றின்பம் கண்டு மகிழ்ந்தது.

அதேபோல் 'நடுநிலை' என்ற நிலைப்பாட்டை அரசுக்கான ஆதரவு எனச் சிலர் அர்த்தப்படுத்தினர். இது எமது கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித் துவத்தை கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துவிட்டது. அதனால்தான் தவ றாக எடுக்கப்பட்ட முடிவை சரிசெய்யு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது அணி என்றும் துரோகத்துக்குத் துணை நின்றது கிடையாது. அதேபோல் அநீதிகள் அரங்கேறும் போது கைகட்டி வேடிக்கையும் பார்க்காது. கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுக் கச் சந்தித்த சவால்கள் ஏராளம். அந்தப் பிரதிநிதித்துவத்தைச் சிதைப்பதற்குச் சிலர் சக்கர வியூகம் வகுத்துச் செயற் படுகின்றனர். அதற்கு ஏதோவொரு விதத்தில் எமது கூட்டணியும் துணை நின்றுவிடக்கூடாது என உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் – எனவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் உறுப் பினர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## முன்னாள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களில் 10 பேர் இதுவரை பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் மற்றும் அவரது மகன் மற்றும் அவரது குடும்ப உறுப் பினர்களைத் தாக்கிய சம்பவம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தைச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் பல் கலைக்கழகமட்டத்தில்விசாரணைகளை ஆரம்பித்ததன்மூலம்12மாணவர்களின் மாணவர் அந்தஸ்து இரத்துச்செய்யப்பட் டுள்ளது என்று பேராதனைப் பல் கலைக்கழகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி உபவேந்தருமான பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

இந்த 12 மாணவர்களும் கண் காணிப்பு கமரா அமைப்பை அவதானித் ததன் பின்னர் அடையாளம் காணப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை இந்த மாணவர்களின் மாணவ அந் தஸ்தை இரத்துச் செய்யும் தீர்மானம் அமுலில் இருக்கும் என்றும் பிரதி உபவேந்தர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றிரவு பொலிஸில் சரணடைந்த 6 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், இன்று காலை மேலும் 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பதுளையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அ.அரவிந்தகுமார், மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:–

பண்டாரவளை கல்வி வலயத்தின் பூணாகலை இலக்கம் 1 தமிழ்ப் பாட சாலை ஆசிரியர் ஒருவர், வெளியாட் களால்கடுமையாகத்தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் தி யத்தலாவை அரசினர் மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து, குறிப்பிட்ட பாடசாலை ஆசிரியர் குழாமினர், பணிப்பகிஷ் கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய ஊடகங் களில் தலைப்புச் செய்திகளாகவும் இருந்து வருகின்றன.

ஆகவே, மேற்படி சம்பவம் தொடர் பாக, ஒரு வாரத்துக்குள் முழுமையான அறிக்கையை எனது கவனத்துக்குக் கொண்டு வருமாறு, கேட்டுக்கொள் கின்றேன் – என்று அந்தக் கடிதத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அர விந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், ஜனாதி பதி, பிரதமர், கல்வி அமைச்சர், ஊவா மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர், ஊவா மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பா ளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## கண்டி மாவட்ட ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீதான இடைக்காலத் தடையை மீளப் பெறும் – நீக்கும் முடிவை தமிழ் முற் போக்குக்கூட்டணியின்தலைமைப்பீடம் உடனடியாக எடுக்க வேண்டும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட இளைஞர் அணியின் பொதுச்செயலாளர் ஜீவன் சரண் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகை யிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தாய் கருத்தரிப்பதற்கு முன்னரே குழந்தைக்குப் பெயர் வைத்து விழா எடுத்துவிட முடியுமா? அவ்வாறு செயற்படும் சிலரும் இருக்கவே செய்கின்றனர். இவ்வாறுதான் பாதீட்டு வாக்கெடுப்பில் 'நடுநிலை' என்ற எமது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் வேலுகுமாரின் நிலைப்பாட்டை 'அரசுக்கு ஆதரவானது' என நினைத் துக்கொண்டு சிலர் சேறுபூசும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

அதுமட்டுமல்ல கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கும் திட்டம் போட்டு செயற்பட்டு வருகின்றனர். இதற்கு நாம் இடம ளிக்கப்போவதில்லை.

கடந்த காலங்களில் கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராக உள்ளக சதிகள் அரங்கேறியும், கூட் டணி ஒற்றுமை கருதி நாம் அமைதி காத்தோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது காலைவாரும் முயற்சிகள் நடந்தும், நாம் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை கோரவில்லை. ஏனெனில் மக்கள் எம் பக்கம் என்பது தெரியும். கூட்டணியை விட்டுச் சென்றவர்களுக் குக்கூட மீண்டும் அடைக்கலம் வழங் கப்பட்டுள்ளது. அதனையும் நாம் விம ர்சிக்கவில்லை.

எனினும், என்றும் மக்கள் பக்கம் நிற்கும் வேலுகுமார் தொடர்பில், தவறானபுரிதலை ஏற்படுத்தும் விதத்தில் அவருக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஏற்புடையது அல்ல. சிலவேளை மாற்று சக்திகளுடன் இணைந்து, தமிழ்ப் பிரதிநிதித்துவத் துக்கு எதிராக சூழ்ச்சி நடக்கின்றதா என்ற ஐயமும் எமக்கு ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்தி செய்து, நிலைமையை சீர் செய்யும் பொறுப்பு தலைமைத்து வத் துக்கு உள்ளது. எனவே, எமது கோரிக் கையை ஏற்று, வேலுகுமார்மீதான இடைநிறுத்தம் மீளப்பெற்றுக்கொள் ளப்பட வேண்டும். அந்தக் கௌரவமான – நியாயமான முடிவு எடுக்கப்படும் வரை நாம் சுயாதீனமாகச் செயற்படுவோம் – என்றார்.

## மாநகர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வசதிகள், அலுவலக வசதிகள் மற் றும் மனித வளங்களைப் பயன்படுத்தி, மேலதிக நிதியைச் செலவிடாமல் ஒருசில மாவட்டங்களில் காணப்படும் நகர சபைகளை மாநகர சபைகளாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கடந்த ஆகஸ்ட் 8 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அங்கீகாரத்தைக் கருத்தில் கொண்டு அம்பாறை மற்றும் மன்னார் ஆகிய இரண்டு நகரங்களிலும் எதிர் பார்க்கப்படும் அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்துவதற்காக, குறித்த நகர சபைகள், மாநகர சபைகளாகத் தரமுயர்த்துவதப்படவுள்ளன.

இது தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகப் பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2022 இல் வெளியிடப்பெற்றது.